பிரஸார்பாரதி

அகில இந்தியவானொலி, சென்னை-4

04 12 2021 12 40

சனிக்கிழமை பிற்பகல்

தலைப்புச் செய்திகள்-

1. நாடாளுமன்றபொதுகணக்குக்குழுவின் நூற்றாண்டுகொண்டாட்டங்களைகுடியரசுத் தலைவர் திருராம்நாத் கோவிந்த் இன்றுதொடங்கிவைத்தார்.

2. பிரதமர் திருநரேந்திரமோடிடேராடூனில் பல்வேறுவளர்ச்சித் திட்டப்பணிகளை இன்னும் சற்றுநேரத்தில் தொடங்கிவைக்கிறார்.

3. மத்தியஅரசுமேற்கொண்டநடவடிக்கைகள் காரணமாக ஜம்மு-கஷ்மீரில் முதலீடுகள் அதிகரித்துவருவதாகஉள்துறைஅமைச்சர் திருஅமித்ஷா தெரிவித்துள்ளார்.

4. வங்கக்கடலில் நிலைகொண்டுள்ள**jawad** புயல் வலுவிழந்துவருவதாகவானிலைஆய்வு மையம் கூறியுள்ளது.

5. ஆசிய ஸ்குவாஷ் சாம்பியன் போட்டியின் ஆடவர் பிரிவில் இந்தியா இறுதிஆட்டத்திற்குமுன்னேறியுள்ளது.

---- இனிவிரிவானசெய்திகள் ---

**[]<<<>>>[]**

நாடாளுமன்றத்தின் பொதுகணக்குக்குழுகாரணமாகத்தான் மத்தியஅரசின் நிதிசெலவினங்களைபொதுமக்கள் அறிந்துகொள்வதாககுடியரசுத் தலைவர் திருராம்நாத்கோவிந்த் தெரிவித்துள்ளார்.

இந்தகுழுவின் நூற்றாண்டுகொண்டாட்டங்களைநாடாளுமன்றமையமண்டபத்தில் இன்றுதொடங்கிவைத்துஅவர் பேசினார்.

பொதுகணக்குக் குழுவின் பணிகள் குறித்தும், திருராம்நாத் கோவிந்த் விரிவாகஎடுத்துரைத்தார்.

மக்களவைத் தலைவர் திருஓம் பிர்லாஉட்படபலர் இந்தநிகழ்ச்சியில் பங்கேற்றனர்.

**[]<<<>>>[]**

கடற்படைதினம் இன்றுகொண்டாடப்படுகிறது.

இதனையொட்டிகுடியரசுத் தலைவர் திருராம்நாத் கோவிந்த் விடுத்துள்ளசெய்தியில், கடல்சார் பாதுகாப்பைஉறுதிசெய்வதில் இந்தபடையினர் துணிச்சலுடன் சிறப்பாகபணியாற்றிவருவதாகக் குறிப்பிட்டுள்ளார்

பிரதமர் திருநரேந்திரமோடிவிடுத்துள்ளசெய்தியில், பேரிடர் காலங்களில் கடற்படையினர் ஆற்றியபணிமகத்தானதுஎன்றுகூறியுள்ளாார்.

சர்வதேச அரங்கில் நமதுகடற்படைக்குசிறப்பான அங்கீகாரம் உள்ளதாகவும் திருநரேந்திரமோடிதெரிவித்துள்ளார்,

இந்நாளையொட்டிநாடுமுழுவதும் பல்வேறுநிகழ்ச்சிகள் நடைபெற்றுவருகின்றன.

**[]<<<>>>[]**

பிரதமர் திருநரேந்திரமோடிடேராடூனில் பல்வேறுவளர்ச்சித் திட்டப்பணிகளை இன்னும் சற்றுநேரத்தில் தொடங்கிவைக்கிறார்.

இந்தநிகழ்ச்சியில் 18 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலானதிட்டங்களுக்குஅடிக்கல் நாட்டியும், முடிவுற்றப் பணிகளைபிரதமர் தொடங்கியும் வைக்கஉள்ளதாகஎமதுசெய்தியாளர் தெரிவிக்கிறார்.

இதனைத் தொடர்ந்துஅங்குநடைபெறும் பேரணியில் திருநரேந்திரமோடிஉரையாற்றுகிறார்.

[]<<<>>>[]

கோவிட்-19 பரவலைகட்டுப்படுத்துவதற்கானபணிகளைமத்தியஅரசுசிறப்பாகமேற்கொண்டதற்குபிரதமர் திருநரேந்திரமோடிஎடுத்தஉறுதியானநடவடிக்கைகளேகாரணம் என்றுஉள்துறைஅமைச்சர் திருஅமித்ஷா கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் நிகழ்ச்சிஒன்றில் பேசியஅவர், ஆக்ஸிஜன் உற்பத்தியைஅதிகரிப்பதற்காகவும், சீரானவிநியோகத்தைஉறுதிசெய்வதற்காகவும் பிரதமர் மேற்கொண்டநடவடிக்கைகளைஎடுத்துரைத்தார்.

மத்தியஅரசுமேற்கொண்டநடவடிக்கைகள் காரணமாக ஜம்மு-கஷ்மீரில் அமைதிநிலவுவதோடு, முதலீடுகளும் அதிகரித்துவருவதாகஅவர் கூறினார்.

அங்குசெல்லும் சுற்றுலாபயணிகளின் எண்ணிக்கையும் அதிகரித்துவருவதாகதிருஅமித்ஷா தெரிவித்தார்..

[]<<<>>>[]

ஒமிக்ரான் தடுப்பு நடவடிக்கைகளைமாநிலஅரசுகள் தீவிரப்படுத்துமாறுமத்தியஅரசுகேட்டுக் கொண்டுள்ளது.

இது தொடர்பாகசுகாதாரத்துறைசெயலர் திருராஜேஷ் பூஷன், மாநிலஅரசின் தலைமைச் செயலர்களுக்குகடிதம் எழுதியுள்ளார்.

இந்தநோய் தொற்றுபாதிக்கப்பட்டுள்ளநாடுகளிலிருந்துவருகைதரும் பயணிகள் முறையாகபரிசோதிக்கப்படுவதைஉறுதிசெய்யுமாறுஅவர் அதில் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கிடையே, தமிழகத்தில் ஒமிக்ரான் தடுப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளதாகமக்கள் நல்வாழ்வுத்துறைஅமைச்சர் திருமாசுப்ரமணியன் கூறியுள்ளார்.

இன்றுசென்னையில் செய்தியாாள்களிடம் பேசுகையில் அவர் இவ்வாறுகூறினார்.

இந்நிலையில் கோவிட்-19-க்கான தடுப்பு மருந்துசெலுத்தும் பணியினைமத்தியஅரசுமேலும் விரைவுபடுத்தியுள்ளது.

இரண்டாம் தவணைதடுப்பு மருந்துசெலுத்திக் கொள்ளாதவர்களுக்குவீடுவீடாகச் சென்றுதடுப்பு மருந்துசெலுத்துவதற்கானபணிகளைமுனைப்புடன் மேற்கொள்ளுமாறுமாநிலஅரசுகளுக்குஅறிவுறுத்தப்பட்டுள்ளதாகசுகாதாரத்துறைதெரிவித்துள்ளது.

மாநிலங்களுக்கு இதுவரை 138 கோடிக்கும் கூடுதலாகதடுப்பு மருந்துவழங்கப்பட்டுள்ளதாகசுகாதாரத்துறையின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது. மாநிலஅரசுகளிடம் தற்போது 21 கோடிக்கும் கூடுதலானதடுப்பு மருந்துகள் கையிருப்பில் உள்ளதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது

தமிழகத்தில் இந்தநோய் தொற்றுதடுப்பு மருந்துசெலுத்துவதற்கானசிறப்பு முகாம் நடைபெற்றுவருகிறது.

50 ஆயிரம் முகாம்கள் மூலம் காலை ஏழு மணிமுதல் தடுப்பு மருந்துசெலுத்தும் பணிநடைபெற்றுவருவதாகஎமதுசெயதியாளர் தெரிவிக்கிறார்.

இதில் இதுவரை—ஐந்து- லட்சத்திற்கும் மேற்பட்டோருக்குதடுப்பு மருந்துசெலுத்தப்பட்டுள்ளதாகதமிழகஅரசுதெரிவித்துள்ளது.

[]<<<>>>[]

வங்கக்கடலில் நிலைகொண்டுள்ள**jawad** புயல் வலுவிழந்துவருவதாகவானிலைஆய்வு மையம் கூறியுள்ளது.

இது காற்றழுத்ததாழ்வு மண்டலமாகநாளைநண்பகல் பூரிகடற்பகுதியைநோக்கிநகரக்கூடும் என்றுதெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்துஅதுமேலும் வலுவிழந்து, மேற்குவங்க கடற்பகுதியைநோக்கிநகரும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாகஆந்திரா, ஒடிஸா, மற்றும் மேற்குவங்கத்தில் பரவலாககனமழைபெய்துவருகிறது.

இந்த மூன்றுமாநிலங்களிலும் புயல் பாதிப்புகளைகுறைப்பதற்காகதேவையானநடவடிக்கைகளைமத்தியஅரசுசம்பந்தப்பட்டமாநிலஅரசுகளுடன் இணைந்துமேற்கொண்டுவருகிறது.

இது தொடர்பாகமத்தியஅமைச்சரவைசெயலர் திருராஜீவ்கெளபாதலைமையில் இரண்டுமுறைஉயர்நிலைகூட்டங்கள் நடைபெற்றன.

இந்தகூட்டத்தில் புயல் பாதிப்புகளைதடுப்பதற்காகமேற்கொள்ளவேண்டியநடவடிக்கைகள் குறித்துவிரிவாகவிவாதிக்கப்பட்டதாகஎமதுசெய்தியாளர் தெரிவிக்கிறார்.

தேசியபேரிடர் மீட்புப்படையினர் அம்மாநிலங்களுக்குஅனுப்பிவைக்கப்பட்டுள்ளனர்.

கடற்படைமற்றும் கடலோரகாவல்படையும் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளதாகமத்தியஅரசுதெரிவித்துள்ளது.

[]<<<>>>[]

தமிழகத்தில் மழைவெள்ளத்தால் பாதிக்கப்பட்டபகுதிகளைமுதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் இன்றும் பார்வையிட்டார்.

காஞ்சிபுரம் மாவட்டத்திற்குஉட்பட்டபோரூர், மாங்காடு, ஐயப்பன்தாங்கல் ஆகியபகுதிகளைபார்வையிட்டஅவர், நிவாரணபணிகளைவிரைவுபடுத்துமாறுஅதிகாரிகளுக்குஅறிவுறுத்தினார்.

இதனைத் தொடர்ந்துபாதிக்கப்பட்டமக்களுக்குநிவாரணஉதவிகளையும் வழங்கியமுதலமைச்சர், அவர்களின் குறைகளையும் கேட்டறிந்ததாகமாநிலஅரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

[]<<<>>>[]

தமிழகமுன்னாள் ஆளுநர் திருரோசையா இன்றுஹைதராபாத்தில் காலமானர். அவருக்குவயது 88.

அவரதுமறைவுக்குமுதலமைச்சர் திரு மு க ஸ்டாலின், மத்திய இணைஅமைச்சர் திருஎல் முருகன் உட்படதலைவர்கள் பலர் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

[]<<<>>>[]

தமிழகஅரசுபணிகளுக்கானபோட்டித் தேர்வில் தமிழ் மொழிதாள் கட்டாயமாக்கப்பட்டுள்ளதாகநிதிஅமைச்சர் திருபழனிவேல் தியாகராஜன் கூறியுள்ளார்.

இன்றுசென்னையில் செய்தியாளர்களிடம் பேசுகையில் அவர் இவ்வாறுகூறினார்.

[]<<<>>>[]

சுயசார்பு இந்தியா இயக்கத்திற்குஊக்கம் அளிக்கும் வகையில் உள்நாட்டிலேயேஉற்பத்திசெய்யப்பட்டபாதுகாப்பு தளவாடங்களைகொள்முதல் செய்வதற்குமத்தியஅரசுஉயர் முன்னுரிமைஅளித்துள்ளது.

இதன் ஒருபகுதியாகஉத்திரபிரதேசம் அமேதியில் உள்ளதுப்பாக்கிதொழிற்சாலையில் ஐந்துலட்சத்திற்கும் கூடுதலாகதுப்பாக்கிகளைஉற்பத்திசெய்யமத்தியஅரசுஒப்புதல் அளித்துள்ளது.

**[]<<<>>>[]**

ஆசிய ஸ்குவாஷ் சாம்பியன் போட்டியில் இந்தியா இறுதிஆட்டத்திற்குமுன்னேறியுள்ளது.

மலேசியாவில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் ஆடவர் பிரிவு அரை இறுதிஆட்டத்தில் இந்தியாஹாங்காங்கை வென்றது,.

மகளிர் பிரிவு அரை இறுதிஆட்டத்தில் இந்தியா, ஹாங்காங்கிடம் தோல்வியடைந்தது.

**[]<<<>>>[]**

நியுசிலாந்துக்குஎதிரான இரண்டாவதுமற்றும் இறுதிடெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் இரண்டாம் நாளான இன்று இந்தியாமுதல் இன்னிங்ஸில் சற்றுமுன் வரை--7- விக்கெட் இழப்புக்கு --308-- ரன் எடுத்துள்ளது.

மயங் அகர்வால் அபாரமாக ஆடி 150 ரன்னுக்குஆட்டமிழந்தார்.

--------

ஒமிக்ரான் காரணமாகதென்னாப்பிரிக்காவுக்குஎதிராக இந்தியாஅந்நாட்டில் பங்கேற்கஉள்ளகிரிக்கெட் போட்டித்தொடர் ஒத்திவைக்கப்படுவதாகஅறிவிக்கப்பட்டுள்ளது.

----------

ஐ எஸ் எல் கால்பந்துபோட்டியில் கோவாஅணி இன்றுஒருங்கிணைந்தவடகிழக்குஅணியைஎதிர்கொள்கிறது.

**[]<<<>>>[]**

போர்ச்சுக்கல்லில் நடைபெற்றுவரும் உலக இளையோர் டேபிள் டென்னிஸ் போட்டியின் 15 வயதுக்குஉட்பட்டோருக்கானமகளிர் பிரிவில் இந்தியாவின் காஸ்விகுப்தா, சயாலிவாணி, ப்ரியா, சுகானாசைனிஆகியோரைக் கொண்டஅணிவெண்கலப்பதக்கம் வென்றது.

***End of News***